Printed Matter

MARTHANDAM DIOCESAN BULLETIN
For Private Circulation Only

# மலங்கரை கத்தோலிக்க பொதுநிலையினர் தினம்



To

BOOK POST


If Undeliveried please return to ...
**Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165**

Santhom Press, Diocese of Marthandam Mob : +91 94-42-469852

# Bulletin

## Diocese of Marthandam

## மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்



மே 9

# ஆண்டவரின் விண்ணேற்றம்

மலர் 21 மே 2024 இதழ் 4

## Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 01.05.2024 | Wednesday | 8.30am | Holy Mass | Kunnakkurudi |
| 03.05.2024 | Friday | 6.30 am<br>10.00 am<br>5.30 pm | Holy Mass<br>MBOC Class<br>Light - 2024 | DM – Mtm<br>Pastoral Centre<br>Thiruvalla |
| 04.05.2024 | Saturday | 10.30 am | Marriage | Pattom - Cathedral |
| 05.05.2024 | Sunday | 9.00 am<br>4.00 pm | Holy Mass<br>Holy Mass | Fathimanagar<br>Mathar |
| 06.05.2024 | Monday | 8.00 am | Holy Mass | Ponnempu |
| 12.05.2024 | Sunday | 7.00 am<br>11.00 am<br>6.00 pm | Holy Mass<br>Laity Day<br>Knocking the door | Kidarakuzhy<br>Pastoral Centre<br>DM - Mtm |
| 13.05.2024 | Monday | 8.00am | Profession | DM - Mtm |
| 15.05.2024 | Wednesday | 6.30am | Holy Mass | DM - Mtm |
| 16.05.2024 | Thursday | 5.00pm | Holy Mass | Arumanai |
| 17.05.2024 | Friday | | Diocesan Convention | Pastoral Centre |
| 18.05.2024 | Saturday | | Minor Orders &<br>Diaconate<br>Diocesan Convention | OIC Congregation<br><br>Pastoral Centre |
| 19.05.2024 | Sunday | | Holy Mass and Preaching<br>Diocesan Convention | Seran Maha Devi<br>Pastoral Centre |
| 20.05.2024 | Monday | 4.00 pm | Jubilee Fr. Jesumarian | |
| 22.05.2024 | Wednesday | 4.00pm | House Blessing | Vellarada |
| 23.05.2024 | Thursday | <br><br>11.00am | Vestition & Minor<br>Orders<br>Marriage | Elavuvilai<br><br>Chandanapuram |
| 24.05.2024 | Friday | | Diaconate | Elavuvilai |
| 26.05.2024 | Sunday | 7.00am | Holy Mass | Kuzhithurai |



# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்

## MARTHANDAM DIOCESAN BULLETIN

மலர். 21 மே 2024 இதழ். 5

THE MALANKARA SYRIAN CATHOLIC CHURCH

# BULLETIN OF THE DIOCESE OF MARTHANDAM

*PATRON*

***His Excellency Most Rev. Vincent Mar Paulos***

*EDITOR*

***Rev. Fr. Franklin Jose***
***The Chancellor***

*COVER DESIGN*

***Mrs. Uni Kumari B.***

*PRINTING*

***Santhom Press,***
***Marthandam***

*PUBLISHED BY*

***The Chancellor***
***Diocese of Marthandam***



மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபை
2024-ஆம் ஆண்டு பொதுநிலையினர் தினத்தை முன்னிட்டு
ஆயர் மாமன்ற பொதுநிலையினர் பணிக்குழுவின் தலைவர்
**மேதகு ஆயர் ஜோசுவா மார் இக்னாத்தியோஸ் ஆண்டகை**
வழங்கும் மேய்ப்பு மடல்

## பொதுநிலையினர் தினம் 2024

*மதிப்பிற்குரிய ஆயர்களே, கோர் எப்பிஸ்கோப்பாமார்களே, றாம்பான்மார்களே, குருக்களே, துறவிகளே, இறையேசுவில் அன்புமிக்க சகோதர சகோதிரிகளே,*

மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபை மே திங்கள் 5-ம் நாள் பொதுநிலையினர் தினத்தை கொண்டாடுகிறது. மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபையில் பொதுநிலையினரின் திருப்பணிகளை பொதுநிலையினருக்கான பணிக்குழு ஒருங்கிணைக்கிறது. நமது குடும்பங்களை திருக்குடும்பத்தின் முன்மாதிரியை பின்பற்றி அருள்நிறைந்த குடும்பங்களாக உருவாக்கம் செய்யும் திருப்பணியை இப்பணிக்குழு சிறப்பு கடமையாக கொண்டுள்ளது. மலங்கரை கத்தோலிக்க இயக்கம் இப்பணியை முன்னெடுத்துச் செல்கிறது. தூய மரியா, புனித யோசேப்பு, குழந்தை இயேசு இவர்கள் இணைந்த திருக்குடும்பம் கிறிஸ்தவ குடும்பங்களுக்கு முன்மாதிரியும் தூண்டுதலும் அளிக்கிறது.

மனித குலத்தின் அடிப்படை கூறாக அமைவது குடும்பம். குடும்பத்தின் இன்ப துன்பங்களில் நாமும் இணைக்கப்பட்டிருக்கின்றோம். ஒரு குறிப்பிட்ட அளவு வரை நம் குடும்பங்களின் நிலையை பொறுத்தே நம்முடைய அனுதின வாழ்வு அமைகிறது. சமூகத்தில் பண்பாட்டுடன் வாழும் ஒருவர் தன்னுடைய வாழ்வுக்கு தன் குடும்பத்துடன் கடமைபட்டிருக்கிறார். நம்முடைய வாழ்வின் வேரோட்டங்கள் ஆழத்தில் குடும்பத்தோடு பின்னிப்பிணைந்து நிற்கின்றது. ஆண்டவராகிய கடவுள் முதல் குடும்பத்தை ஏதேனில் படைத்தார். முதல் குடும்பத்தை நிறுவியவர் இறைவனே. குடும்பம் கடவுளின் மிகச்சிறந்த கொடை. ஆதாமோ படைப்பிற்கெல்லாம் மகுடம்.

கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் மனிதனின் ஆற்றலுக்கு உட்படுத்தினார். மனிதனே அவை அனைத்திற்கும் பெயரிட்டான். ஆனால் "மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று; அவனுக்கு தகுந்த துணையை உருவாக்குவேன்" என்றார் கடவுள் (தொநூ 2:18).

கடவுள் ஒரு பெண்ணை உருவாக்கி மனிதனிடம் அழைத்து வந்த போது, அவள் அவனது எலும்பின் எலும்பும் சதையின் சதையும் ஆனவள் என அறிந்துக் கொண்டான் (தொநூ 2:23). அவனுக்கு உகந்த துணையை கடவுள் வழங்கினார். எனவே, உடன் வசிப்பதும் உறவொன்றிப்பும் சாத்தியமாகிறது. அவர்கள் இருவரும் முழுமைபடுத்தப்பட்டிருக்கின்றனர். ஒவ்வொரு திருமணத்திலும் நிகழ்வது இதுவே.

திருமணத்தில் ஒருவருக்கு கடவுள் தகுந்த இணையை தருகிறார். ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையேயான அன்புறவு திருமணம் என்னும் அருளடையாள பீடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு கிறிஸ்துவின் அருளால் அது முறிவுபடா தன்மையுடையதாக மாறுகிறது. இரண்டு அருவிகள் இரண்டு நீரூற்றுகளிலிருந்து தோன்றி இருபெரும் பாதைகள் வாயிலாக ஒழுகி ஒரு நதியாக மாறி கடலில் சங்கமம் அடைவது போல இரண்டு இடங்களில் பிறந்து வளர்ந்த ஓர் ஆணும் பெண்ணும் இதய பூர்வம் இணைந்து மரணம் அவர்களை வேறுபடுத்தும் வரை ஒன்றாய் வாழும் திருமண உறவு எவ்வளவோ மேன்மையானது. தம்பதிகளின் இதய ஆவலும் ஒன்றே, வாழ்க்கை பாணியும் ஒன்றே.

அவர்கள் இருவர் ஆயினும் ஒரே உடலாய் இருந்து ஒருவருக்கொருவர் பணிவிடை செய்ய கடமைப்பட்டவர்கள். அவர்கள் வாழ்வின் மேன்மையை வருணிக்க இயலாது என்கிறார் திருச்சபை தந்தை தெர்த்துல்லியன் : "இறைவனால் அழைப்பு பெற்று, விண்ணகத்தால் சான்று பகிரப்பட்டு, வானதூதர்களால் அறிவிக்கப்பட்டு திருச்சபை இணைத்து ஆசீர்வாதங்களால் முத்திரை வைத்த திருமணத்தின் ஒப்பற்ற மேன்மையை எப்படி வருணிக்க இயலும். அதனை தம்பதிகள் அனுபவித்தே அறிய வேண்டும்".

குடும்பத்தை காண்போர், அங்கே மண்ணகத்திலுள்ள விண்ணகத்தை பார்க்க வேண்டும். திருக்குடும்பமோ அன்பின் மாட்சிக்கும்



மதிப்பீடுகளுக்கும் சான்று பகிர்கிறது. இயேசு தனது குழந்தை பருவத்தை குடும்பத்தில் தான் செலவிட்டார். தூய லூக்கா இயேசுவின் குழந்தை பருவத்தை ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார் என்னும் பொருள் சொறிந்த சொற்றொடரில் சுருக்கித் தருகிறார் (லூக் 2:52). திருக்குடும்பம் எல்லா குடும்பங்களுக்கும், குறிப்பாக நம்பிக்கையாளர்களுக்கும் நற்செய்தியின் பள்ளிக்கூடமாக அமைகிறது. இரண்டாவது மலங்கரை சபை பேரவை "அருள்நிறைந்த குடும்பங்களாவோம்" என்ற சிந்தனையை மையப்படுத்தி நடந்தது நாமனைவரும் அறிந்ததே. நம் குடும்பங்கள் அருள்நிறைந்த குடும்பங்களாக மாற வேண்டும் என்பதே திருச்சபையின் ஆவல். இறையனுபவமும் இறையாசீரும் பெறும் இடமாக குடும்பங்கள் உருவாக்கம் பெற வேண்டும். ஆசிபெற்ற குடும்பங்கள் அன்புறவிலும், நம்பிக்கையிலும், அக்கறையிலும் இணைந்து பயணிக்கும்.

இறையனுபவம் பெற்ற குடும்பங்களில் ஒரு ஆன்மீக சூழல் இருக்கும். அமைதியும் ஆனந்தமும் நிறைத்து காணப்படும். அன்பு, அக்கறை, நேர்மை, புனிதம், நம்பிக்கை, மன்னிப்பு, உண்மை, நீதி போன்ற கிறிஸ்தவ மதிப்பீடுகளுக்கு பயிற்சி கிடைக்கும் இடமே குடும்பம். கிறிஸ்தவ குடும்பங்கள் அருள்நிறைந்த குடும்பங்களாக மாற நான்கு வகையான செயல்பாடுகள் உறுதிபடுத்தப்பட வேண்டும்: இறைவார்த்தை, அருளடையாள வாழ்க்கை, குடும்ப ஜெபம், இரக்கச் செயல்கள். இறைவார்த்தை வாசித்து கற்று வாழ குடும்பமாக இணைந்து முயற்சிக்கும் போது இறைவார்த்தையின் அருட்பொழிவு குடும்பத்தார் அனைவருக்கும் கிடைக்கிறது. வாழ்வின் வழிகளில் அது ஒளியாகவும் தூண்டுதலாகவும் மாறுகிறது. சவால்களை எதிர்நோக்குடன் எதிர்கொள்ளும் ஆற்றலை குடும்பங்கள் பெறுகின்றன.

கடவுளால் நிறுவப்பட்ட அருளடையாளமே குடும்ப வாழ்வு. குடும்ப வாழ்வை அருளடையாள அருட்பொழிவு ஆற்றல்படுத்துகிறது. 1936, ஜனவரி 1-ம் நாள் வணக்கத்திற்குரிய பேராயர் மார் இவானியோஸ் ஆண்டகை திருச்சபை மக்களுக்கு வழங்கிய மேய்ப்பு மடலில் கிறிஸ்தவ குடும்பங்களில் அருளடையாளங்களின், குறிப்பாக திருப்பலியின்

முக்கியத்துவம் என்ன என்பதை தெளிவுபடுத்தியுள்ளார். "உடலுக்கு உணவு எப்படி தேவையோ, அவ்வாறே ஆன்மீக வாழ்வுக்கு இறைவார்த்தை வாசிப்பு தேவை. அடிக்கடி பாவசங்கீர்தனம் செய்யவும், திருப்பலியில் பங்கேற்கவும், நற்கருணையை அனுபவிக்கவும் மக்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். 'ஆன்மாவின் நீராடலும் உணவும்' என்ற கட்டுரையில் ஒப்புரவு அருளடையாளத்தை ஆன்மாவின் குளிபாட்டுதலகாவும் தூய நற்கருணையை ஆன்ம உணவாகவும் பேராயர் ஒப்புமைப்படுத்துவது குறிப்பிடதக்கது.

திருமுழுக்கு அருளடையாளத்தை குறித்து கூறும்போது அவர் குறிப்பிடுவதும் கவனிக்கதக்கது. திருமுழுக்கின் போது பெற்றோர்களும் ஞானப்பெற்றோர்களும் இணைந்து எடுத்துக்கொள்ளும் உறுதிமொழியை மாயல்தோ (இயேசுவின் தேவாலய நுழைவு) திருநாளில் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். வளர்ந்து வரும் குழந்தைகள் திருமுழுக்கு நேரத்தில் எடுத்துக்கொண்ட உறுதிமொழிக்கேற்ப வாழ வேண்டும். சுருங்ககூறின், "அருளடையாளங்களின் திருத்தொண்டர்" என அழைக்கப்பட்ட பேராயர் குடும்ப வாழ்வின் உறுதிக்கு அருளடையாள வாழ்வு அடிப்படை தேவை என அழுத்தம் திருத்தமாக கற்பித்தார். இணைந்து ஜெபிக்கும் குடும்பம் இணைந்தே வாழும். குடும்ப செபம் குடும்ப உறவுகளை ஆற்றல்படுத்துகிறது.

1942-ம் ஆண்டு ஏப்ரல் 18-ம் நாள் வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகை குடும்ப ஜெபத்தின் தேவையை குறித்து திருச்சபை மக்களுக்கு மேயப்புமடல் எழதியுள்ளார். அவரது பார்வையில், கடவுளை ஆராதனை செய்வதற்கும், கடவுள் நமக்கு தந்த அருள்வரங்களுக்கு நன்றிச் சொல்லவும், நமது தேவைகளை ஆண்டவர் திருமுன் ஒப்புக்கொடுக்கவும், நமது உள்ளங்களை ஆண்டவரிடம் எழுப்புகின்ற இறைமனித சங்கமமே ஜெபம். குடும்பங்கள் இணைந்து மன்றாடுவது ஒரு சிறந்த செயல். தனி ஜெபங்களை விட பலர் இணைந்து ஜெபிப்பது அதிக பலன் தரும். பேராயர் அவர்கள் மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபையின் வேளை ஜெபங்களையும், அகில உலக திருச்சபையிலுள்ள ஜெபங்களுள் சிலவற்றையும் ஜெபிக்கத் தூண்டினார்.



இரக்கச் செயல்கள் வாழ்வை அர்த்தமுள்ளதாக மாற்றுகிறது. தன்னலம் தவிர்த்து பிறர் நலனையும் வளர்ச்சியையும் ஊக்குவிக்கும் வாழ்க்கை பாணி வளர்ந்து வர வேண்டும். துயருறுவோரோடு துயருற்று அவர்களுக்கு அக்கறையோடு பணிவிடை புரியும் போது கிறிஸ்தவ வாழ்வு பொருளுள்ளதாக மாறுகிறது. நல்ல சமாரியனை போல் பிறருடைய தேவைகளில் உடனிருக்கும் வாழ்க்கை பாணி குடும்ப வாழ்வை பயன் தருவதாக மாற்றுகிறது. மாறிவரும் சூழலில் இறைதிட்டத்துடன் இணைந்து நின்று இறைமக்கள் சிறந்த குடும்ப வாழ்வு வாழ வேண்டுமென்று திருச்சபை விரும்புகிறது. விழுமியங்களின் விளைநிலமாக குடும்பங்கள் மாற வேண்டும் என்பதை திருச்சபை வலியுறுத்துகிறது. திருச்சபை மக்கள் அருள்நிறைந்த குடும்பங்களை உருவாக்க வேண்டும் என்பதை திருச்சபை விரும்புகிறது. குடும்பம் அன்பின் பிறப்பிடமாகவும், உயிரின் ஊற்றாகவும், நம்பிக்கையின் விளைநிலமாகவும் இருக்க வேண்டும். இதுவே குடும்பத்தை குறித்த திருச்சபையின் பார்வை. ஆனால் இன்று குடும்பங்களில் ஆன்மீகம் குறைந்து உலக பாணிகள் அதிகரித்துள்ளன. ஒருவர் மற்றவரிடமுள்ள நம்பக தன்மையை இழந்து தன்னலம் பெருகுகிறது. இது வழியாக குடும்பங்களில் பிரிவுகளும் பிளவுகளும் தோன்றுகின்றன. அருள்நிறைந்த குடும்ப பண்பாடுகள் முக்கியத்துவம் பெறுவதில்லை. நுகர்வு கலாச்சாரம் குடும்பங்களை வலுவிழக்கச் செய்துள்ளது. திருத்தந்தை 6-ம் பவுல் Humanae Vitae என்னும் திருமடலில், திருமணமும் குடும்பமும் கடவுளின் திட்டம் என்றும், தம்பதிகளின் அன்பு நிலையும் ஒருவருக்கொருவரிடையேயுள்ள கையளித்தலும் குடும்ப வாழ்வின் புனிதத்தை எடுத்துரைக்கிறது என்று கற்பிக்கிறார். Familiaris Consortio என்னும் திருத்தூதுவ மடலில் கடவுளோடு இணைந்த வாழ்வே குடும்பம் என்றும் அது நம்பிக்கை பயிற்சிக்கான இடம் என்றும் தூய இரண்டாம் யோவான் பவுல் திருத்தந்தை அறிவுறுத்துகிறார். குடும்பங்களுக்கான தமது கடிதத்தில் குடும்ப வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய புண்ணியச் செயல்கள் பற்றியும் மதிப்பீடுகள் குறித்த உணர்வு பற்றியும், நம்பிக்கையில் வேரூன்றி வாழ வேண்டிய புனித வாழ்வு பற்றியும் அறிவுறுத்துகிறார்.

குடும்பங்களின் மேய்ப்புபணியை குறித்து கத்தோலிக்கத் திருச்சபை கவலை கொண்டுள்ளது. குடும்ப வாழ்வு தனிநபர்களை மையப்படுத்தாமல் கிறிஸ்துவை மையப்படுத்தியதாக அமைய வேண்டும். கிறிஸ்து மைய வாழ்வில் நமது ஆன்மீக வாழ்விலும் அருளடையாள வாழ்விலும் திருச்சபை மீது கொண்ட உறவும் அதிகம் அதிகமாக வளர்ச்சி காணவும், குடும்பங்கள் சார்ந்த மேய்ப்பு பணிகளை துரிதபடுத்தவும், அருள்நிறைந்த குடும்பங்களுக்கான செயல்திட்டங்களை செயல்படுத்தவும் மலங்கரை கத்தோலிக்க இயக்கம் வாயிலாக நம் குடும்பங்களுக்கு இயலட்டும். அருள்நிறைந்த குடும்பங்களை உருவாக்கும் முயற்சியில் திருச்சபையின் அடிப்படை அலகாகிய குடும்பங்களில் நற்செய்தி மதிப்பீடுகளை வாழவும் பகிர்ந்து கொள்ளவும் MCA இயக்கம் குடும்பங்களை ஆயத்தம் செய்யட்டும். ஒன்றிப்பு, நேர்மை, அமைதி ஆகிய மூன்று நோக்கங்களை வலியுறுத்தி மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபையின் ஒட்டுமொத்த வளர்சிக்காகவும் MCA செயல்படுகிறது. மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபையின் மறைத்தூது பணிகளில் பங்கேற்பதும் திருச்சபையை பொதுவெளியில் பிரதிநிதித்துவப்படுத்துவதும் MCA இயக்கத்தின் செயல்பாட்டு நோக்கமாக உள்ளன.

பொதுநிலையினரின் வளர்சிக்கும் திருச்சபையுடன் இணைந்த செயல்பாட்டிற்கும் பொதுநிலையினர் தின கொண்டாட்டம் தூண்டுதல் அளிக்கட்டும். நற்செய்தியை வாழவும், நற்செய்தியை அறிவிக்கும் பணித்தளங்களில், நற்செய்தியில் வாழ்ந்து, குருக்களுக்கு உதவியும் செய்து வருகின்ற பொதுநிலையினரை அவர்களது அர்பண மனநிலையை பாராட்டி நன்றி கூறுகிறேன்.

பொதுநிலையினர் தினம் மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபையின் ஒரு பொது கொண்டாட்டம். MCA, MCYM, MCMF, தந்தையர் சங்கம், Vincent de Paul Society, Legion of Mary போன்ற அனைத்து இயக்கங்களும் இணைந்து இவ்விழாவை கொண்டாட வேண்டும். திருச்சபையின் நலனுக்காகவும் சமூகத்தின் வளர்சிக்காகவும் பொதுநிலையினர் இயக்கங்கள் வழங்கி வரும் தலைமைத்தும், பங்கேற்பு அனைத்தையும் நினைவு கூர்ந்து மகிழ்கிறேன். நற்செய்தி சங்கம் வாயிலாக



பொதுநிலையினர் நற்செய்தியை வாழ எடுத்துக்கொள்ளும் முயற்சியை பாராட்டுகிறேன். திருச்சபையின் பல்வேறு இடங்களில் குடும்பங்களை மையமாக கொண்டு நடத்தப்படும் மறைத்தூது பணியில் பொதுநிலையினர் காட்டும் ஆர்வம் ஒப்பிட முடியாதது. வெளிநாடுகளில் வாழும் மலங்கரை மக்களின் மறைத்தூது பணி ஆர்வம் கண்டு மகிழ்ந்து அதில் ஈடுபட்டிருக்கும் பொதுநிலையினரை திருச்சபையின் ஒளிநிறைந்த சாட்சிய முகமாக பார்க்கின்றேன். இத்தகைய கடின சூழலிலும் உழைப்பின் ஒரு பகுதியை திருச்சபையின் பிறரன்பு பணிகளுக்காக மாற்றி வைக்கும் சகோதரர்களை நன்றியோடு நினைக்கிறேன்.

பொதுநிலையினர் தின திருப்பலி காணிக்கையை நமது பொதுநிலையினர் திருபணிகளுக்காக செலவிடுவது நீங்கள் அறிந்ததே. அன்றைய தினம் தாராள உள்ளத்துடன் காணிக்கை வழங்கி நமது தனிப்பட்ட சட்ட எண் 601-ன் படி காணிக்கையை பங்குதந்தையர்கள் மறைமாவட்ட நிதி அலுவலகத்தில் அனுப்பி வைக்கவும். நிதி அலுவலகத்தில் சேகரிக்கப்படும் தொகையின் பாதியை திருச்சபை அளவிலான பொதுநிலையினர் திருப்பணிகளுக்காக திருச்சபையின் தலைமை செயலகமாகிய காதோலிகேட் மையத்திலுள்ள நிதி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

MCA இயக்கத்தின் விண்ணக பாதுகாவலராகிய தூய யோசேப்பின் மன்றாட்டு நமக்கு அரணாக அமையட்டும். பொதுநிலையினர் தினத்தின் ஆசீரையும் வாழ்த்துகளையும் அனைத்து பொதுநிலையினருக்கும் இத்திருப்பணிகளில் உடன்பயணிக்கின்ற அன்பிற்குரியவர்களுக்கும் தெரிவிக்கிறேன்.

உயிர்த்த ஆண்டவர் உங்கள் திருப்பணிகளை வாழ்த்தி ஆசீர்வதிப்பாராக.

✝ மேதகு ஜோசுவா மார் இக்னாத்தியோஸ்
பொதுநிலையினரின் ஆயர்
மாமன்றத்திற்கான பணிக்குழு தலைவர்
மாவேலிக்கரை மறைமாவட்ட ஆயர்

காதோலிகேட் மையம்
பட்டம், திருவனந்தபுரம்,

# குருப்பட்ட நிகழ்வுகள்

## திருத்தொண்டர் அபிஷேக் ராஜ்

மார்த்தாண்டம் மறைமாவட்டத்திற்காக இவ்வாண்டு திருத்தொண்டர். அபிஷேக் ராஜ் அவர்கள், ஏப்ரல் மாதம் 6-ம் தேதி, சனிக்கிழமை அன்று செருப்பாலூர், இயேசு மரியா திருஇருதய மலங்கரை கத்தோலிக்க ஆலயத்தில் வைத்து, மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் திருக்காரங்களால் குருவாக திருலைப் படுத்தப்பட்டார். இக்குருப்பட்ட நிகழ்வில் நம் மறைமாவட்டத்தை சார்ந்த குருக்கள், அருட்சகோதரிகள், இறைமக்கள் மற்றும் பிற மறைமாவட்டத்தை சார்ந்த குருக்களும், கலந்துக் கொண்டு புதிய குருவிற்காக ஜெபித்தார்கள். சிறப்பாக, இக்குருப்பட்ட நிகழ்வில் புதுக்குருவின் உபகாரியான திரு. செறியன் ப்ளாமூட்டில் அவர்களுடைய பெற்றோர்களான திரு. ஐசக் ப்ளாமூட்டில் மற்றும் திருமதி. பிரேமா அவர்களும், அவர்களோடு இணைந்து திரு. ஷாஜி மற்றும் அவர்களின் குடும்பத்தாரும் குருப்பட்ட நிகழ்வுகளில் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர்.

புதுக்குரு அவர்கள் தன்னுடைய முதல் நன்றி திருப்பலியை மறுநாள், ஏப்ரல் மாதம் 7-ம் தேதி, ஞாயிற்றுக்கிழமை செருப்பாலூர், இயேசு மரியா திருஇருதய மலங்கரை கத்தோலிக்க ஆலயத்தில் வைத்து, மேதகு ஆயர். வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் முன்னிலையில் நிறைவேற்றினார். முதல் நன்றி திருப்பலியை தொடர்ந்து புதுக்குருவிற்கு வாழ்த்துக்கூட்டமும் நடைபெற்றது. குருப்பட்டம் மற்றும் முதல் நன்றி திருப்பலியிலும் ஏராளமான இறைமக்கள் கலந்து கொண்டு புதுகுருவிற்காக ஜெபித்தார்கள்.



## திருத்தொண்டர் கிறிஸ்து தாஸ்

புனேகட்கி மறைமாவட்டத்திற்காக மார்த்தாண்டம் மறைமாவட்டம் தேமானூர் பங்கை சார்ந்த திருத்தொண்டர். கிறிஸ்து தாஸ் அவர்கள், ஏப்ரல் மாதம் 20-ம் தேதி, சனிக்கிழமை ஆற்றூர், தேமானூர், புனித தோமையார் மலங்கரை கத்தோலிக்க ஆலயத்தில் வைத்து, மேதகு ஆயர் மேத்யூஸ் மார் பக்கோமியோஸ் ஆண்டகை அவர்களின் திருக்காரங்களால் மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகையின் முன்னிலையில் குருவாக திருலைப்படுத்தப்பட்டார். இக்குருப்பட்ட நிகழ்வில் ஏராளமான குருக்கள், அருட்சகோதரிகள், கலந்துக்கொண்டு புது குருவிற்காக ஜெபித்தார்கள். குறிப்பாக, இக்குருப்பட்ட நிகழ்வில் புதுக்குருவின் உபகாரியான ஆஸ்திரேலியாவிலுள்ள திருமதி பார்பற மற்றும் திருமதி கீலீ அவர்களும், திரு. லூயிஸ் அவர்களின் குடும்பமும் குருப்பட்ட நிகழ்வுகளில் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர்.

புதுக்குரு அவர்கள் தன்னுடைய முதல் நன்றி திருப்பலியை ஏப்ரல் மாதம் 21-ம் தேதி, ஞாயிற்றுக்கிழமை புனித தோமையார் மலங்கரை கத்தோலிக்க ஆலயத்தில் வைத்து, மேதகு ஆயர் மேத்யூஸ் மார் பக்கோமியோஸ் ஆண்டகை அவர்களின் முன்னிலையில் நிறைவேற்றினார். முதல் நன்றி திருப்பலியை தொடர்ந்து புதுக்குருவிற்கு வாழ்த்துக்கூட்டமும் நடைபெற்றது. குருப்பட்டம் மற்றும் முதல் நன்றி திருப்பலியிலும் ஏராளமான இறைமக்கள் கலந்து கொண்டு புதுகுருவிற்காக ஜெபித்தார்கள்.

# குருக்களின் தியானம்

இம்மாத குருக்களுக்கான தியானம் 09.04.2024 அன்று காலை 9 மணிக்கு மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்றது. இம்மாத தியானம் Lectio Divina மையமாகக்கொண்டு அமைந்திருந்தது. தியானத்தை பேரருட்தந்தை ஜோமிக்ஸ் அவர்கள் வழிநடத்துவார்கள். தியானத்தை தொடர்ந்து மேதகு ஆயர் அவர்கள் ஆசியுரையும், அறிவிப்பும் வழங்கினார்கள். அத்தோடு மறைமாவட்ட முதன்மை குரு பேரருட்தந்தை ஜோஸ் பிறைட் அவர்களின் பெயர் விழாவை ஒட்டி சிறு வாழ்த்துக்கூட்டமும் நடைபெற்றது. இந்நிகழ்வுகளில் மறைமாவட்டத்திலுள்ள அருட்தந்தையர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

# மறைபரப்பு தளச்செய்திகள்

தேவதானம்பட்டி மறைபரப்பு தளத்தில் ஏற்கனவே இருந்த ஆலய கட்டிடத்தில் புதிதாக பலிபீடம் அமைக்கப்பட்டது. 14.04.2024 அன்று நமது மறைமாவட்ட ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்களால் அர்ச்சிக்கப்பட்டது. இந்நிகழ்வுகளில் அதில் ஏராளமான மக்கள் பங்கெடுத்தார்கள்.

களக்காடு நல்லநாதபுரத்தில் அமைந்துள்ள மறைபரப்பு தளத்தில் 20.03.2024 அன்று தையல் பயிற்சி கூடம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அங்குள்ள மக்களுக்கு மருத்துவ சேவையாக Mini Health மையம் ஆரம்பிக்க 17.04.2024 அன்று கட்டிடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. மறைமாவட்ட நிதிகாப்பாளர் பேரருட்தந்தை தேவதாஸ் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். இந்நிகழ்வில் அவ்வூர்மக்கள் பலர் கலந்துகொண்டார்கள்.

திருச்சி மறைபரப்பு தளத்தில் புதிய ஆலய கட்டுமான பணியானது ஆரம்பிக்கப்பட்டு அடித்தள வேலைகள் நிறைவடைந்துள்ளது.



# மார்த்தாண்டம் மறைமாவட்ட பொதுநிலையினர் பணிக்குழு

மார்த்தாண்டம் மறைமாவட்ட பொதுநிலையினர் பணிக்குழு சார்பில் சிறப்பு கருத்தரங்கம் குழித்துறை மார் இவானியோஸ் CBSE பள்ளி வளாகத்தில் வைத்து 13.04.2024 அன்று பிற்பகல் 2.00 மணி முதல் 5.00 மணி வரை நடைபெற்றது. இக்கருத்தரங்கிற்கு மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் தலைமை ஏற்று தொடங்கி வைத்தார்கள். பொதுநிலையினர் பணிக்குழு செயலாளர் திரு. யோ. வர்க்கீஸ் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். மறைமாவட்ட மலங்கரை கத்தோலிக்க இயக்கத்தின் இயக்குனரும் மறைமாவட்ட பொதுநிலையினர் பணிக்குழு இயக்குனருமாகிய அருட்தந்தை அர்னால்டு டயஸ் அவர்கள் அறிமுக உரையாற்றினார்கள். கிறிஸ்தவ வாழ்வுரிமை இயக்கத்தின் தமிழக ஆயர் பேரவையின் செயலரும் தூத்துக்குடி மறைமாவட்டத்தை சார்ந்த அருட்தந்தை பேராசிரியர் ஜேம்ஸ் விக்டர் அவர்கள் இந்தியா தேர்தல் திருவிழா 2024-ல் நமது பங்கு, கடந்து வந்த பாதை, தற்போதைய சூழ்நிலைகளை விளக்கி நாம் தெளிந்த மனநிலையோடு செயல்பட வேண்டுமென சுமார் இரண்டு மணி நேரம் சிறப்பான கருத்துரை வழங்கினார். இக்கருத்தரங்கிற்கு மலங்கரை கத்தோலிக்க இயக்கம், மரியாயின் சேனை, தாய்மார்கள் சங்கம், வின்சென்ட் தே பவுல் சங்கம், இளைஞர் இயக்கம் ஆகியவற்றில் மறைமாவட்ட, மறைவட்ட, பங்குதள பொறுப்பாளர்கள் மற்றும் முன்னணி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். பொதுநிலையினர் பணிக்குழு உறுப்பினர் திரு. இராஜேந்திர பாபு அவர்கள் அனைவருக்கும் நன்றி கூற கருத்தரங்கு நிறைவுற்றது..

# மேதகு ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகையின் 27-வது ஆண்டு நினைவு தின கொண்டாட்டம்

மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் முதல் ஆயர் மேதகு லாறன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகையின் 27-வது ஆண்டு நினைவு பாதயாத்திரை, ஏப்ரல் மாதம் 7-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மேதகு ஆயர் அவர்கள் பிறந்த ஊரான வெள்ளெலும்பு, மார் எப்ரேம் நகர், மலங்கரை கத்தோலிக்க தேவாலயத்தில் அருட்தந்தை கிறிஸ்துராஜ் OIC அவர்களின் தலைமையில் காலை 6.30 மணிக்கு காலை ஜெபம், திருப்பலியுடன் ஆரம்பமானது. திருப்பலி நிறைவில் தூபமன்றாட்டும் நடைபெற்றது. அடுத்த நாள் காலை 8.45 மணி அளவில் பாதயாத்திரை பின்குளம் பங்கில் வந்தடைந்தது. பாதயாத்திரையர் களுக்காகவும், பங்கு மக்களுக்காகவுமான திருப்பலி மறைமாவட்ட மலங்கரை கத்தோலிக்க இயக்கத்தின் இயக்குனர் அருட்தந்தை அர்னால்டு டயஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அடுத்த நாள் காலை 10.30 மணியளவில் ஜெபத்துடன் ஆரம்பிக்கப்பட்டு புஷ்பகிரி களியக்காவிளை வழியாக சுமார் மதியம் 01.30 மணியளவில் குழித்துறை மார் எப்ரேம் வளாகம் வந்தடைந்தனர். மதிய உணவிற்கு பின் பிற்பகல் 4.00 மணி அளவில், மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் ஜெபத்துடன் ஆரம்பிக்கப்பட்டு, இறைமக்களுடன் மேதகு ஆயர் அவர்களும் பாதயாத்திரையாக மாலை 5.20 மணி அளவில், மார்த்தாண்டம், கிறிஸ்து அரசர் பேராலயம் வந்தடைந்தது.



இறுதியாக மேதகு ஆயரின் நினைவிடத்தில் தூப மன்றாட்டு நடைபெற்றது. இந்நிகழ்வில் பேராலய பங்கு தந்தையும், மறைமாவட்ட முதன்மை குருவுமான மோண் ஜோஸ்பிறைட், உதவி பங்குத்தந்தை அருட்தந்தை விபின்ராஜ் மற்றும் அருட்தந்தையர்கள், அருட்கன்னியர்கள், பாதயாத்திரையர்கள் ஏராளம் பேர் கலந்து கொண்டனர். இறுதியில் நேர்ச்சை அப்பம் வழங்கப்பட்டது. இப்பாதயாத்திரையை மறைமாவட்ட மலங்கரை கத்தோலிக்க இயக்கம் தலைமை ஏற்று நடத்தியது.

மேதகு ஆயர் லாரன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகை அவர்களின் நினைவு திருப்பலி ஏப்ரல் 8-ஆம் தேதி திங்கட்கிழமை காலை 6.45 மணிக்கு மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் தலைமையில் மறைமாவட்ட அருட் தந்தையர்கள் இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுத்தனர். தொடர்ந்து ஆயர் அவர்களின் நினைவுப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. மறைமாவட்ட முதன்மை குரு மோண் ஜோஸ்பிறைட் அவர்கள் அனைவரையும் வாழ்த்தி வரவேற்றார்கள். கூட்டத்தில் மறைமாவட்ட ஆயர் அவர்கள் தலைமை உரையாற்றினார்கள். மறைந்த மேதகு ஆயர் லாரன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகை அவர்களின் நினைவலைகளை அவருடன் பயணித்து பணி ஆற்றிய மார்த்தாண்டம் பேராலயத்தை சார்ந்த திரு. வில்லியம் அவர்கள் சிறப்புரையாற்றினார். மறைமாவட்ட ஆயர் அவர்கள் எழுதிய ‘வழிபாடும் வாழ்வும்’ என்ற புத்தகத்தை மேதகு ஆயர் அவர்கள் வெளியிட, மறைமாவட்ட மேய்ப்புப்பணி அறிவுரை குழு செயலர்

திரு. M. அருள்தாஸ் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். Sr. மேழ்சி சேவியர் எழுதிய 'அருளடையாளங்கள் அருளின் வாய்க்கால்கள்' தமிழாக்க புத்தகத்தை மேதகு ஆயர் அவர்கள் வெளியிட மேரி மக்கள் கன்னியர் சபை மாகாணத் தலைவி மதர் ரோஸ் பிரான்சிஸ் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

மறைமாவட்ட மலங்கரை கத்தோலிக்க இயக்கம் சார்பாக மறைந்த மெதகு ஆயரின் வாழ்க்கை பற்றி நடத்தப்பட்ட வினாடி வினா போட்டிக்கான பரிசுகள். கொல்லங்கோடு மறைவட்டம் சார்பாக மேதகு ஆயரின் நினைவு நலத்திட்ட உதவிகள், மார்த்தாண்டம் பேராலய தந்தையர்கள் சங்கம் சார்பாக நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. மறைமாவட்ட செயலர் பேரருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்கள். தொடர்ந்து மேதகு ஆரின் நினைவிடத்தில் தூபமன்றாட்டு நடைபெற்றது. மறைமாவட்ட ஆயர் அவர்களின் ஆசீர் ஜெபத்துடனும், நேர்ச்சை அப்பம், காலை சிற்றுண்டியுடன் இந்நிகழ்வுகள் நிறைவு பெற்றது. இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட்கன்னியர்கள், அருட்சகோதர்கள் இறை மக்களும் கலந்து கொண்டனர்.





## ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகையின் 27–வது நினைவு தின நிகழ்வுகள்

நமது மறைமாவட்டத்தின் முதல் ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகையின் 27-வது நினைவு பாதையாத்திரையை மார்த்தாண்டம் MCA முன்னின்று நடத்தியது. 07.04.2024 அன்று காலை 6.30 மணிக்கு வெள்ளெலும்பு ஆலயத்தில் திருப்பலிக்குப் பின் பாதயாத்திரையானது ஆரம்பித்து வைக்கப்பட்டு வாகனத்தில் பின்குளம் பங்கை வந்தடைந்தது. திருப்பலிக்குப்பின் பாதயாத்திரையாக குழித்துறை மார் எப்ரேம் வளாகத்தை வந்தடைந்தனர். பின்னர் அங்கிருந்து ஆயர் மேதகு வின்சென்ட் மார் தலைமையில் பாதயாத்திரையானது தொடங்கப்பட்டு மாலையில் மார்த்தாண்டம் பேராலையம் வந்தடைந்தது. அங்கு தூப மன்றாட்டு நடைபெற்றது.

08.04.2024 அன்று காலை 7.00 மணிக்கு நடந்த திருப்பலியிலும், நினைவு பொதுக்கூட்டம் மற்றும் தூப மன்றாட்டிலும் MCA உறுப்பினர்கள் பங்கெடுத்தனர். அன்றைய நினைவு பொதுக்கூட்டத்தில் ஆயர் லாரன்ஸ் மார் எப்ரேம் நினைவை ஒட்டி MCA நடத்திய விவிலிய வினாடி வினாப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசும், கொல்லங்கோடு MCA சார்பாக 38 மாணவ, மாணவியர்களுக்கு தலா ரூ. 1000/- கல்வி உதவித் தொகையும் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வுகளை MCA மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை அர்னால்டு டயஸ் மற்றும் பொறுப்பாளர்கள் ஒழுங்குபடுத்தினர்.

# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

## வழிகாட்டுதல் பயிற்சி

மிட்ஸ் நிறுவனத்தில் செயல்பட்டு வரும் தளிர்கள் உலகம் திட்டத்தின் பயனாளிகளுக்கு ஆண்டு தோறும் உயர்கல்விக்கான வழிகாட்டுதல் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு 12-ம் வகுப்பு தேர்வு எழுதிய மாணவர்களுக்கான வழிகாட்டுதல் பயிற்சியானது 26.03.2024 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் பயிற்சியினை துவங்கி வைத்தார்கள். சிகரம் பயிற்சி மையத்தின் டீன் திரு. காட்வின் ஜினு அவர்கள் பயிற்சியினை நடத்தினார்கள். உயர்கல்வி பிரிவுகள் மற்றும் அவற்றிற்கான வேலைவாய்ப்புகள் குறித்து தெளிவாக மாணவர்களுக்கு எடுத்துரைக்கப் பட்டது. எந்த பாடதிட்டம் தேர்ந்தெடுத்தால் எந்தெந்த வேலைவாய்ப்புகள் அதிகமாக உள்ளன என்றும் அதற்கான நுழைவுத் தேர்வுகளை எதிர்கொள்வது எப்படி என்பது குறித்தும் விரிவாக விளக்கப்பட்டதுடன் மாணவர்களின் சந்தேகங்களும் தீர்த்து வைக்கப்பட்டன. பின்னர் மரியகிரி கலைக்கல்லூரி, மார் எப்ரேம் பொறியியல் கல்லூரி, மலங்கரை ஸ்கூல் ஆப் காமேர்ஸ், IAS Academy ஆகிய கல்வி நிறுவனங்களிலிருந்து பேராசிரியர்கள் வருகை தந்து மாணவர்களுக்கு வழிகாட்டுதல்கள் வழங்கினார்கள். இந்த பயிற்சியானது மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ள முறையில் அமைந்ததாக கருத்து தெரிவித்திருந்தனர். இந்த பயிற்சியில் மொத்தம் 69 மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

13.04.2024 அன்று 10-ம் வகுப்பு தேர்வு எழுதிய மாணவர்களுக்கான வழிகாட்டுதல் பயிற்சி மிட்ஸ் அரங்கத்தில் வைத்து நடத்தப்பட்டது. இப்பயிற்சியினை சிகரம் பயிற்சி மையத்தின் இயக்குநர் அருட்தந்தை அகஸ்டின் மற்றும் டீன் காட்வின் ஜினு ஆகியோர் இணைந்து நடத்தினர். காலை 10 மணி முதல் மாலை 3.30 மணி வரை நடைபெற்ற இப்பயிற்சியில் 65 மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.



## உதவித்திட்டங்கள்

1. 20.03.2024 அன்று விருட்சம் கடன் உதவி திட்டத்தின் வழியாக களியக்காவிளை பணி மண்டலத்திற்கு உட்பட்ட 14 சுய உதவி குழுக்களில் உள்ள 56 உறுப்பினர்களுக்கு ரூபாய் 28,00,000/- கடனாக வழங்கப்பட்டது.
2. 16.04.2024 அன்று புற்று நோயால் பாதிக்கப்பட்ட 15 நோயாளிகளின் மருத்துவ செலவிற்காக ரூபாய் 85,000/- உதவித்தொகை வழங்கப்பட்டது.
3. 17.04.2024 அன்று விருட்சம் கடன் உதவி திட்டத்தின் வழியாக நாகர்கோவில் பணி மண்டலத்திற்கு உட்பட்ட 13 சுய உதவி குழுக்களில் உள்ள 52 உறுப்பினர்களுக்கு ரூபாய் 26,00,000/- கடனாக வழங்கப்பட்டது.

## பிறநிகழ்வுகள்

1. 19.03.2024 அன்று காலை 10 மணிக்கு மிட்ஸ் நிறுவனத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சூரிய ஒளிமின் திட்டத்தை மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்கள் துவக்கி வைத்தார்கள். இந்தநிகழ்வில் மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் மற்றும் மிட்ஸ் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.
2. 24.03.2024 அன்று தளிர்கள் உலகம் திட்டத்தின் பயனாளிகளுக்கான மிட்ஸ் அறிவுத் திறன் தேர்வு அனைத்து தேர்வு மையங்களிலும் (மிட்ஸ், மரியகிரி, ஆற்றூர்) நடைபெற்றது.
3. 10.04.2024 அன்று விண்ணைத் தொடு திட்டத்தின் காலாண்டு ஆய்வுக் கூட்டம் அழகியமண்டபத்தில் உள்ள அன்னை ஆதா பயிற்சி மையத்தில் வைத்து நடத்தப்பட்டது. இந்த கூட்டத்தில் இத்திட்டத்தின் பணியாளர்கள்; அனைவரும் கலந்து கொண்டனர்.
4. 11.04.2024 அன்றுதளிர்கள் உலகம் திட்டத்தின் மாதாந்திர சிறப்பு பயிற்சி நடைபெற்றது. அன்றையதினம் கிரேஸ் மருத்துவமனையின் சார்பாக இலவச பொது மருத்துவம் மற்றும் கண் பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது. இந்த பரிசோதனை முகாமில் மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் என 100-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

## HEALTH FOR ONE MILLION (HOM)
### Diocese of Marthandam

HOM நிறுவனரும், மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் முதல் ஆயருமான மேதகு லாறன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகை அவர்களின் 27-வது நினைவுதினத்தை முன்னிட்டு, 06.03.2024 அன்று மரியகிரி Malankari School of Commerce -ல் வைத்து இலவச மருத்துவமுகாம் நடைபெற்றது. பொதுமருத்துவம், கண் மருத்துவம் மற்றும் தோல் சம்மந்தமான நோய்களுக்கு சிகிட்சைஅளிக்கப்பட்டது. இம்மருத்துவ முகாம் மார்த்தாண்டம் மறைமாவட்ட மருத்துவ சேவை இயக்கமான HOM தலைமையில், மரியகிரி Malankari School of Commerce இணைந்து காரக்கோணம் SMCSI மருத்துவ கல்லூரி மருத்துவமனை மருத்துவர்களால் நடத்தப்பட்டது. இம்முகாம் காலை 10 மணிமுதல் மதியம் 12.30 மணிவரை நடந்தது. HOM இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் குமார் தலைமையில் HOM பணியாளர்கள் மற்றும் Malankari School of Commerce மாணவர்கள் இதற்கான ஏற்பாடுகளை செய்தனர்.

HOM நிறுவனரும். மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் முதல் ஆயருமான மேதகு லாறன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகை அவர்களின் 27-வது நினைவு தினத்தை முன்னிட்டு ஏப்ரல் 8-ம் தியதி மார்த்தாண்டம் கிறிஸ்தரசர் பேராலயத்தில் வைத்து நடைபெற்ற நிகழ்ச்சியில் HOM சார்பாக மார்த்தாண்டம் மறைமாவட்டத்தைச் சார்ந்த 4 ஏழை பெண்களுக்கு மார் எப்ரேம் நினைவு திருமண நிதி உதவியாக ரூபாய் 10,000/- வீதம் மேதகு ஆயர் வின்சன்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களால் வழங்கப்பட்டது. HOM இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் குமார் இதற்கான ஏற்பாடுகளை செய்தார்.

மார்த்தாண்டம் மறைமாவட்ட மருத்துவ சேவை இயக்கமான HOM தலைமையில் தமிழ்நாடு ஆயர் பேரவை நலவாழ்வு பணிக்குழு சார்பாக



## பெயர்விழா நல்வாழ்த்துகள்



அருட்தந்தை. ஜான் ஜோஸ்
மேய் 08



அருட்தந்தை ஷாஜி கிறிஸ்டோ
மேய் 09

15.4.2024 அன்று ஆழ்வார்கோவில் மலங்கரை கத்தோலிக்க ஆலயத்தில் வைத்து என் ஆரோக்கியம் என் உரிமை என்ற பொருளில் விழ்ப்புணர்வு கருத்துரை நடைபெற்றது. இக்கருத்துரை விழிப்புணர்வு நிகழ்ச்சியை HOM இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் குமார் அவர்கள் அறிமுக உரையாற்றி துவக்கி வைத்தார்கள். தமிழ்நாடு ஆயர் பேரவை நலவாழ்வு பணிக்குழு செயலர் அருட்சகோதரி ஜேஸ்பின் மேரி அவர்கள் கருத்துரை வழங்கினார்கள். பின்னர் மலங்கரை கத்தோலிக்க கல்லூரி சமூகபணி முதுகலை முதலாம் ஆண்டு மாணவர்கள் சார்பாக புற்றுநோய் விழ்ப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் HOM சுயஉதகிக் குழு உறுப்பினர்கள் 80 பேர் கலந்து கொண்டனர். HOM பணியாளர்கள் மற்றும் ஆழ்வார்கோவில் மலங்கரை கத்தோலிக்க ஆலய உறுப்பினர்கள் இதற்கான ஏற்பாடுகளை செய்தனர்.

# மறைவட்ட செய்திகள்

## மார்த்தாண்டம் மறைவட்டம்

மார்த்தாண்டம் மறைவட்ட குருக்களுக்கான மாதாந்திர தியானம் 21.3.2024 வியாழக்கிழமை பேராலயத்தில் வைத்து சுமார் 10:30 மணி அளவில் முதன்மைகுரு மோண் ஜோஸ் பிறைட் அவர்கள் தலைமையில் ஜெபத்துடன் ஆரம்பமானது. அருட்தந்தை பிபின் ராஜ் அவர்கள் தியான உரை வழங்கினார்கள். கூட்டத்தில் மார்ச் 31-ம் தேதிக்கு முன் கணக்கு ஒப்படைக்க வேண்டும் என்றும், வீடு இல்லாதவர்களுக்கு வீடு வழங்கும் திட்டம் பற்றியும் ஏப்ரல் மாதம் 14-ஆம் தேதி மார்த்தாண்டம் மறைவட்ட மேப்புப்பணி அறிவுரை குழு கூட்டம் நடத்துவது பற்றியும், MCA சார்பாக நடத்தப்படும் மார் எப்ரேம் ஆண்டகையின் நினைவு பாதயாத்திரை மற்றும் திருப்பலியில் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்றும், மார்ச் மாதம் 24-ஆம் தேதி நடத்தப்படும் வினாடி வினா போட்டியில் இறைமக்கள் கலந்து கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது. மறைமாவட்ட MCYM சார்பாக ஏப்ரல் 8-தேதி குறும்பட போட்டி, ஏப்ரல் மாதம் 20-ம் தேதி வழிகாட்டுதல் வகுப்பு, மே மாதம் 25-ஆம் தேதி தலைமைத்துவ பயிற்சி, ஆகஸ்ட் மாதம் 25-ஆம் தேதி நற்கருணை மாநாடு நடத்துவது பற்றி மறைவட்ட MCYM இயக்குனர் தந்தை தெரிவித்தார்கள். ஹோம் சார்பாக ஏப்ரல் மாதம் 6-ாம் தேதி மருத்துவ முகாம் மரியகிரி கம்யூனிட்டி ஹாலில் வைத்தும் ஏப்ரல் 13 ஒரு நாள் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு ஸ்பெஷல் ஸ்கூலில் வைத்தும் மே 27-ஆம் தேதி செவிலியருக்கான கருத்தரங்கு ஐபோன் TNBC சார்பாக நடத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மறைக்கல்வி சார்பாக MBOC Teachers Training மே 3, 4 ஆகிய நாட்களில் நடைபெறும் என்றும், பாலர் சபை பிள்ளைகளின் சங்கமம் நடத்த திட்டமிடுவதாகவும் இயக்குனர் தந்தை அவர்கள் தெரிவித்தார்கள். அருள்வாழ்வியம் சார்பாக அருள்வாழ்விய ஒருங்கிணைப்பாளர்கள் எடுக்க வேண்டும் என்றும் மறைவட்ட அருள்வாழ்விய இயக்குனர் தந்தை தெரிவித்தார்கள். இறுதி ஜெபத்துடன் கூட்டம் இனிதே முடிவுற்றது. இந்நிகழ்வுகளை மறைவட்ட முதன்மை குரு மோண் ஜோஸ் பிறைட் மற்றும் பேராலய இணை பங்குதந்தை அருட்தந்தை விபின் ராஜ் அவர்கள் இணைந்து ஒழுங்குபடுத்தினார்கள்.

## திருமண ஆயத்தப்பயிற்சி

**மேய்** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் 17, 18 ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.

# ஆயரின் ஏப்ரல் மாத நிகழ்வுகள்



2 ➢ மலங்கரை கத்தோலிக்க கலை கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் கலந்துக்கொண்டார்.

2 ➢ பாளை மறைமாவட்டம் மகாராஜ நகர் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றினார்.

3 ➢ மார் எப்ரேம் பொறியியல் கல்லூரியின் ஆண்டு விழாவிற்கு தலைமைத் தாங்கினார்.

3 ➢ மார்த்தாண்டம் தொடக்கப் பள்ளியின் ஆண்டு விழாவிற்கு தலைமைத்தாங்கினார்.

4 ➢ மலங்கரை கத்தோலிக்க கலை கல்லூரியின் ஆண்டு விழாவிற்கு தலைமைத்தாங்கினார்.

5 ➢ பார்வதிபுரத்தில் MPDN Ltd. புது கிளையை அர்ச்சித்து துவங்கி வைத்தார்.

6 ➢ செருப்பாலூர் ஆலயத்தில் வைத்து திருத்தொண்டர் அபிஷேக் ராஜ் அவர்களுக்கு குருப்பட்டம் வழங்கினார்.

7 ➢ அருட்தந்தை அபிஷேக் ராஜ் அவர்களின் முதல் நன்றித் திருப்பலியில் கலந்துக் கொண்டு மறையுரையாற்றினார்.



7 ➢ மார் எப்ரேம் ஆண்டகையின் நினைவை முன்னிட்டு நடைபெற்ற பாதயாத்திரையில் கலந்துக்கொண்டார்.

8 ➢ மார் எப்ரேம் ஆண்டகையின் விண்ணக வாழ்வின் இருபத்தேழாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மார்த்தாண்டம் பேராலயத்தில் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

9 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற குருக்களுக்கான மாதாந்திர தியானத்தில் கலந்துக்கொண்டார்.

9 ➢ புஷ்பகிரி பள்ளி ஆண்டு வழாவிற்கு தலைமைத் தாங்கினார்.

11 ➢ நித்திரவிளையில் MPDN Ltd. புது கிளையை அர்ச்சித்து துவங்கி வைத்தார்.

12 ➢ மார் இவானியோஸ் பள்ளிக்கூடத்தின் தலைமையாசிரியை அருட்சகோதரி ஆனிஸ் அவர்களின் பிரிவு உபச்சார விழாவிற்கு தலைமைத் தாங்கினார்.

13 ➢ HOM சார்பாக நடைபெற்ற சிறப்பு ஒருநாள் கருத்தரங்கை துவக்கி வைத்தார்.

13 ➢ மார் இவானியோஸ் பள்ளிக்கூடத்தில் MCA சார்பாக நடைபெற்ற சிறப்பு கருத்தரங்கை துவக்கி வைத்தார்.

13 ➢ Malankara School of Word and Worship-ல் இறையியல் பயில்பவர்களுக்கு வகுப்பு எடுத்தார்.

13 ➢ மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற இளையோர்களுக்கான சிறப்பு கூடுகையில் வகுப்பு எடுத்தார்.

14 ➢ பத்தனம்திட்டை மறைமாவட்டத்தில் வலஞ்சுழி ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

14 ➢ தேவதானம்பட்டி மறைபரப்புத்தளத்தில் புதிதாக கட்டியெழுப்பப்பட்ட பலிபீடத்தை அர்ச்சித்தருளினார்.

15 ➢ ஆரியங்காவு ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

20 ➢ ஆற்றூர் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி தொடர்ந்து திருத்தொண்டர் கிறிஸ்துதாஸ் அவர்களின் குருப்பட்ட நிகழ்வில் கலந்துக்கொண்டார்.

21 ➢ தாபோர் தியான இல்லத்தில் நடைபெற்ற திருத்தூயக பணியாளர்களின் கூடுகைக்கு தலைமைத்தாங்கினார்.

24-25 ➢ கன்னியாகுமரியில் நடைபெற்ற தமிழ்நாடு ஆயர் பேரவையின் தொழிலாளர் நல பணிக்குழுவின் கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

26 ➢ மார் எப்ரேம் இளம் குருமடத்தில் திருப்பலி நிறைவேற்றி குருமாணவர்களை சந்தித்தார்.

28 ➢ சந்நனப்பள்ளி ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

28 ➢ சூசைபுரம் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.






## இம்மாதம் நினைவு கூர

மேய் 2024

1 – தொழிலாளர்களின் பாதுகாவலரான புனித யோசேப்பு
இறைவாக்கினர் எரேமியா




1

2 – அலெக்ஸ்லாண்டிரியாவின் மார் அத்தனாசியோஸ்

5 – உயிர்ப்புக்குப்பின் ஐந்தாம் ஞாயிறு
மலங்கரை கத்தோலிக்க பொதுநிலையினர் தினம்

6 – நேர்மையாளர் யோபு, புனித டொமினிக் சவியோ



6

7 – நம் ஆண்டவர் இயேசுவின் சிலுவை கண்டெடுத்த நாள்


8 – திருத்தூதரான மார் யோவான்

9 – சூலோக்கோ (நம் ஆண்டவரின் விண்ணேற்றம்)
இறைவாக்கினர் எசாயா

10 – ஆர்வலராகிய திருத்தூதர் மார் சீமோன்

11 – சுலாவாய் இனத்தவரின் மார் சிறில் மற்றும் மெத்தோடியோஸ்

12 – உயிர்ப்புக்குப்பின் ஆறாம் ஞாயிறு
சைப்ரசின் மார் எப்பிப்பானியோஸ்
நிசிபிஸ் ஆயரும் மல்ப்பானுமாகிய மார் யாக்கோபு
சமூக தகவல் தொடர்பு தினம்




10

13 – அந்தியோக்கியாளர் மார் ஈசாக் மல்பான்

14 – மார் ஆதாயி

15 – கதிர்களை முன்னிட்டு தூய இறையன்னையின் நினைவு
மார் பக்கோமியோஸ்

19 – பெந்தக்கோஸ்துத் திருநாள்



20

20 – நான்கு நற்செய்தியாளர்கள்

21 – புனித ஹெலனாள்

22 – புனித றீத்தா

24 – தங்க வெள்ளிக்கிழமை

25 – புனித சோபியா

26 – பெந்தக்கோஸ்துக்குப்பின் முதல் ஞாயிறு
இறை அழைத்தல் தினம்
புனித பிலிப் நேரி

29 – புனித தியோடோசியா

30 – கேசரியா நகரின் புனித எவுசேபியஸ்
தோமஸ் மார் எவுசேபியஸ் ஆண்டகையின் பெயர்விழா
ஆர்க் நகரின் புனித யோவான்

## மேதகு ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேம் நினைவு தினம்



## மார்த்தாண்டம் மறைமாவட்ட பொதுநிலையினர் பணிக்குழு




## MIDS



## HOM




## குருப்பட்ட நிகழ்வுகள்







## மறைபரப்புத்தள செய்திகள்



